# நீங்களும் எழுதலாம் வாங்க

உங்களுக்கு நம்பிக்கை
இருக்கிறதோ இல்லையோ
எழுதுவது என்பது
உண்மையிலேயே ஒரு யாகம்தான்.
அதை மிகுந்த ஈடுபாட்டுடன்
ஒழுங்முறை தவறாமல் செய்ய
வேண்டும். செய்ய பழகிக்கொள்ள
வேண்டும்.



www.banukumar.in

# நீங்களும் எழுதலாம் வாங்க

# (100 டிப்ஸ்)

## மன்னார்குடி பானுகுமார்

- ”எழுத்து தெய்வம்” என்றார் பாரதி. சரி. நீங்களும் எழுத்தையும் வணங்க வேண்டியது தானே? எழுத வேண்டியது தானே?
- எப்படி எழுதுவது என்பது சரியாகப் பிடிபடாவிட்டாலும் எழுத ஆசை உள்ள நிறைய பேர் இருக்கிறோம்.
- அமெரிக்காவில் Stock Market for Dummies, Wine for Dummies, Programming for Dummies என்று புத்தகம் போடுவார்கள். அந்த மாதிரி யாராவது Writing for Dummies என்று ஒரு புத்தகம் போட்டால் என்ற கேள்வியே ”நீங்களும் எழுதலாம் வாங்க!” (100 டிப்ஸ்) என்று இந்த புத்தகம் உருவாகியது.
- ஒரு மருத்துவரை ஒரு பொறியாளரை உருவாக்க எவ்வளவு ஆண்டுகள் படிக்கனும், பயிற்சி எடுக்கனும்? ஆனால் ஒரே ஒரு பத்தகத்தை வாங்கிப் படித்து விட்டு ஒரு தொழில் நெறிஞர் ஆகிவிட முடியுமா? முடியும். எப்படி?





- அந்தத் தொழில்தான் எழுத்து. அந்த புத்தகம்தான் இது. எமக்குத் தொழில் எழுத்து என்றார் பாரதியார்.. எல்லாருமா

பாரதியாராகப் பிறந்து விடுகிறார்கள்? ஆனால் தனது மனதுக்குள் தோன்றுகிறதை பிறருக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லா மனிதர்களுக்கும் உண்டாகிறதல்லவா?


- நிறைய படிக்கிறீர்கள் ஏன் எழுத மாட்டேன்கிறீர்கள்? என்பார் தத்துவமேதை ஜே. கிருஷ்ணமுர்த்தி. அதிகம் படிப்பவர்கள் எழுதுவது எளிதே.
- எழுத்தின் ரகசியம் எழுதுவதே என்றார் சுந்தர ராமசாமி. எழுதித்தான் எழுத்தில் உள்ள சிக்கல்களையும் தடைகளையும் தெரிந்துகொள்ள முடியும்.
- உங்கள் முதல் புத்தகத்தை எழுதும் முன்பு நீங்கள் எவ்வளவு புத்தகங்களை படித்தீர்கள்?
- நீங்கள் சிறு வயது முதல் வாசித்த நூல்கள் ஏராளம். மொழி உங்களது எண்ணங்களுக்கு முழுமையான ஒரு தொடர்பூடகமாக ஆகும்.







- கண்டது கற்கப் பண்டிதனாவான் என்று ஒரு மொழியுண்டல்லவா? வாசிப்பு..அதுவும் இன்னதென்றில்லாமல் எது கிடைத்தாலும் வாசிப்பது, பின்னர் சிலகாலம் செல்லவே நமக்கு ஈர்ப்புள்ள பகுதி பிடிபடும் போது அந்த வகையில் தேடி வாசிப்பது.. இதற்கு வரையறையே கிடையாது.

- ஆனால் நாம் ஆழ்ந்து வாசிக்கும் யாவையும் நம் சிந்தனைக் கருவூலத்தினுள்ளே விதையாக ஊன்றப்படும். பின்னர் நாமே விதைக்க முயற்சிக்கும் போது உள்ளே தேடி செல்வங்களெல்லாம் நாமறியாமலே நமது விரல்களில் வேறு வடிவத்தில் வந்துதிக்கும்! அதனால் இவ்வளவு நூல்கள் தான் வாசிக்க வேண்டுமென்று ஒரு வரையறை சொல்லி முடியாது.
- எதற்காக எழுதுகிறீர்கள் என்ற நோக்கத்தை வரையறை செய்து கொண்டால் நீங்கள் நினைப்பது அத்தனையும் நிறைவேறும். குழந்தைக்குக் கூடப் புரியும் என்பார்களே. அத்தனை எளிய நடையில் சொல்லப்பட்டிருக்கும் விசயங்களை நீங்கள் உள் வாங்கிக் கொள்ள வேண்டும்.
- 'ஒரு மனிதன் வாழ்ந்தான் என்பதற்கு, அவன் ஒரு குழந்தையாவது பெற்றிருக்க வேண்டும்; ஒரு வீடாவது கட்டி இருக்க வேண்டும்; ஒரு நூலாவது எழுதி இருக்க வேண்டும்' என்பார்கள். எனவே, நண்பர்களே, வாழ்நாளில் எப்பாடு பட்டாவது ஒரு நூலாவது எழுதி வெளியிட்டு விடுவது என்னும் உறுதிமொழியை இன்றே - இக்கணமே - எடுத்துக் கொள்ளுங்கள்.





- சாதனை படைத்த அனைவருமே வேதனையையும், சோதனையையும் தாங்கியும் தாண்டியும் தான் வெற்றியாளராக உயர்ந்திருக்கிறார்கள்.
- நீங்கள் எழுதவதற்கு எப்படி தொடங்க வேண்டும்? உங்கள் வீட்டை விட்டு எங்கு வெளியில் சென்றாலும் சரி இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் பார்வையில் படும் ஒவ்வொன்றும் உங்களுக்கு ஒரு வாய்ப்பைத் தரப் போகிறது.
- நீங்கள் பயணம் செய்து கொண்டிருக்கலாம். கடைக்குப் போய் காய்கறி வாங்கலாம். உங்கள் கவனம் எங்கே இருக்க வேண்டும் தெரியுமா? மனிதர்கள் மீதுதான். எத்தனைவிதமான மனிதர்களைப் பார்க்கிறீர்கள்? எல்லேரையும் மனதில் படம் பிடித்து வைத்துக் கொள்ளுங்கள்.. யாராவது எதையாவது வித்தியாசமாக செய்து வைப்பார்கள்.
- நம் உள்ளத்தில் படிந்துள்ள இறைவனின் தெய்வீக மூச்சுக் காற்றின் வெப்பமே எழுத்து.





- எழுதுவது சில சமயங்களில் நம் கவனம் முழுவதையும் கவர்ந்திழுக்க வல்லது. சில சமயம் களைப்பூட்டுவது. என்றாலும் எனக்கு விருப்பமான தொழிலை என் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வருமானத்தையும் பெற முடிந்து என் அதிர்ஷ்டம்தான" என்பார் ஆலடஸ் ஹக்ஸலி.
- எடுத்த எடுப்பிலேயே எழுதுவதா என்று யோசிக்கிறீர்களா? முதலில் இந்தத் தயக்கத்தை விரட்டுங்கள். நீங்கள் பார்த்ததை, கேட்டதை மனதில் பதிந்து வைத்துக் கொள்ளுங்கள்.
- 'நீங்கள் இதுவரை ஏன் நூல் எழுதவில்லை?' என்று பத்துப் பேரைக் கேட்டுப் பாருங்கள். அவர்களுள் பாதிப் பேர், 'யார் படிப்பார்கள்?' என்பார்கள்; மீதிப் பேர், 'யார் வெளியிடுவார்கள்?' என்பார்கள்.
- வாழ்க்கையின் வெற்றியே எதிர்பாராத செயலை எதிர்கொள்வதிலும், முடிவு எடுப்பதிலும் தான் அடங்கி உள்ளது என மேலாண்மை இயலில் கூறுவார்கள். காலத்திற்கு ஏற்ற பொருளைத் தேர்வு செய்து, அதைக் கொடுக்கிற விதத்தில் கொடுத்தால் வெற்றி நிச்சயம்


- 'சித்திரமும் கைப் பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்' என்பது போல், எழுத்தும் உங்களுக்கு வசப்படுவது பழக்கத்தால் தான்; முறையான பயிற்சியும் இடைவிடாத முயற்சியுமே துணை நிற்கும்.




- நாள்தோறும் குறைந்தது பத்துப் பக்கங்களாவது படிப்பது, ஐந்து பக்கங்களாவது எழுதுவது என்பதை வழக்கமாக வைத்துக் கொள்ளுங்கள்; அதுவே பின்னாளில் வாடிக்கையாகி, வாழ்க்கை ஆகிவிடும்!
- “காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு. மாலை முழுவதும் விளையாட்டு – என்று வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா!” என்னும் பாரதியின் வாக்கு, வளரும் பாப்பாவுக்கு மட்டும் அல்ல, வளர்ந்த நமக்கும் பொருந்தி வருவது தான்! எதையும் வழக்கப்படுத்திக் கொள்ளுதலில் தான் வாழ்க்கையின் வெற்றியே அடங்கியுள்ளது.
- உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ எழதுவது என்பது உண்மையிலேயே ஒரு யாகம்தான். அதை மிகுந்த ஈடுபாட்டுடன் ஒழுங்குமுறை தவறாமல் செய்ய வேண்டும். செய்யப் பழகிக் கொள்ளுங்கள்.


- ஜார்ஜ் பெர்னாட்ஷாவின் எழுத்துக்ளைத திருப்பி அனுப்பியவர்கள் அநேகர். அவர் ஒரு நாளைக்கு இத்தனை பக்கம் எழுத வேண்டும் என்று நினைத்தால் அதை எழுதிவிட்டுத்தான் வேறு வேலை பார்ப்பராம். நீங்களும் அப்படி இருக்க வேண்டும்.
- மனிதன், கருவிலே பிறந்து தெருவிலே திரிவது போல், சிந்தனையும், உள்ளமெனும் உள்ளறையிலே பிறந்து உலகமென்னும் உருண்டையிலே உலவுகின் றத
- உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் ஓயாமல் சிந்தி கின்றான். உந்தியெழும் சிந்தனைகளைத் தான் விரும்பும் நேரத்தில் வார்த்தைகளாக வெளிப்படுத்துகின்றான். எண்ணங்களைச் சில சமயம் எழுத்துகளாகவும் எழுதிக் காட்டுகின்றான்.








- உள்ளத்தில் ஊமையாகவும் உதடுகளில் ஓசையாகவும் எழுகின்ற எண்ணங்கள் அவரவர் அறிவுக்கும் ஆற்றலுக்கும் தக்கவாறு, சிறுகதைகளாகவும், சிறந்த கட்டுரைகளாகவும், கருவடைந்த கவிதைகளாகவும் உருப்பெறுகின்றன
- உங்கள் எழுத்தில் சீரான ஒட்டம் முக்கியம். உங்கள் வாக்கியங்கள் சிறியதாக அமையட்டும். நீண்ட வாக்கியங்கள் சலிப்பூட்டும். சின்னச்சின்ன வாக்கியங்களில் கோர்வையாகச் சொல்லுங்கள். ஒரு பத்தியின் முடிவில் ஆர்வத்தைத் தூண்டுங்கள்.


- நீங்கள் எழுதும் பத்திகள் சிறியதாக அமைய வேண்டும். இரண்டு அல்லது மூன்று வரிகளுக்கு மேல் பத்தி அமைக்க வேண்டும்.
- பெரிய நீண்ட பத்திகளைக் காட்டிலும் சிறிய பத்திகள் கவர்ந்து இழுக்கக் கூடியவை. கம்ப்யூட்டரில் லே அவுட் செய்வதற்கு ரொம்பவும் வசதியானவை. சிறு பத்திகள் அழகுற வடிவமைப்பதற்குப் பெரிதும் உதவுபவை.
- பத்தி அமைப்பதற்கு விவிலியதைப் பாருங்கள். கண்ணதாசனின் ”அர்த்தமுள்ள இந்துமதம்” புத்தகத்தைப் பாருங்கள். பத்திகள் மிகச் சிறியதாகவே இருக்கும். இது வாசகர்களை சலிப்பில்லாமல் படிக்கத் தூண்டும்.
- எப்படி எழுத வேண்டும்? அனுபவித்து எழுத வேண்டும். எழுத வேண்டும் என்ற ஒரு விஷயம் இருக்க வேண்டும். அந்த விஷயமாகவே நீங்கள் ஆக வேண்டும். ஜீவ தாகமாக இருக்க வேண்டும். அப்போது தான் உங்களால் எழுத முடியும்.
- நீங்கள் எப்போது எழுத முடியும் என்றால், உங்களுக்கு உங்கள் அனுபவம் இதயத்திலிருந்து வரவேண்டும். அதைத்தான் ஜீவதாகம் என்று சொல்வது. உங்களுடைய ஆத்மாவிலிருந்து வர வேண்டும்.



- எதாவது ஒரு விஷயத்தைப் பற்றி எழுத வேண்டும் என்ற ஜீவதாகம் தோன்றி, அதுவாகவே நீங்கள் மாறி, உங்கள் அனுபவத்தை நீங்கள் உணர்ந்து செய்தீர்களானால், அப்புறம் உங்களுக்கு தானாகவே எழுத வந்துவிடும்.
- பெரிய பெரிய எழுத்தாளர்கள் எல்லாம் என்ன சொல்வார்கள் என்றால், ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஒரு சிறுகதை எழுதக்கூடிய அளவிற்கு விஷயம் இருக்கும் என்று சொல்வார்கள்.
- எதைப்பற்றி எழுத வேண்டுமென்றாலும் அதைப்பற்றி முழுமையாக படித்தீர்களானால்தான் அதைப்பற்றி எழுத முடியும். என்னுடைய எந்தப் புத்தகத்தைப் படித்தீர்களானாலும் ஆன்மீகம் அடிநீரோட்டமாக இருக்கும்.
- மனத்தின் உல்லாச உலாவைப் போல உங்கள் படைப்பு இருக்க வேண்டும்.
- சிறந்த பாடகன் ஒருவன், ராகம் ஒன்றை ஆலாபனை செய்வது போல், ஒரு பொருளையோ அனுபவத்தையே களையுடனும் சுவையுடனும் படைப்பில் இசைக்க வேண்டும்.
- கைதேர்ந்த ”மாஜிக்” வித்தைக்காரன் ஒருவன், நெருங்கிய நண்பன் ஒருவனுடன் மனம் விட்டு உரையாடும் தோரணையில் படைப்பு அமைய வேண்டும்.





- மின்மினிப் பூச்சிமுதல் வானத்து நட்சத்திரம்வரை குழந்தையின் மழலை முதல் உயரிய கண்ணதாசனின் படைப்பு வரை, ஆணி அடிக்கும் செயல்முதல் அகிலத்தையே கிடுகிடுக்க வைக்கும் செய்கை வரை, வெட்டிப் பேச்சுமுதல் வேதாந்தம் வரை, எதைப்பற்றியும் எழுதலாம். எத்தனையோ விதங்களிலும் எழுதலாம். எதைப்பற்றி எந்தக் கோணத்தில் எழுதினாலும் இன்பம் ஊட்டும் படைப்பாக, மொழி விருந்தாக இருக்க வேண்டும்.
- நீங்கள் எழுதியதை நீங்களே திருத்துவது சலிப்பூட்டுகிறதா? அப்படி அல்ல. நீங்கள் என்ன நினைத்துக் கொண்டு ஒரு வார்த்தையைப் பயன்படுத்தினீர்கள் என்பது உங்களுக்குத்தான் தெரியும். திருத்தும்போது அது உங்களுக்கு மட்டுமே புரியும்.
- உங்கள் படைப்பிற்கு சரியான தலைப்பினைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- சுருக்கமான தலைப்பு வாசகர்களைச் சுண்டி இழுக்க ஏற்றது. சுருக்கமாக இருப்பதை விடச் சுருக் என்று இருப்பது ரொம்பவும் முக்கியம். நீளமான தலைப்புகளைப் படிப்பதற்கு யாருக்கும் பொறுமை இருப்பதில்லை.





- முடிந்தால் மூன்று வார்த்தைகளுக்குள் தலைப்பை வைத்துப் பாருங்கள். அது முடியவில்லை என்றால் ஐந்து வார்த்தைகளாக இருக்கலாம். அதற்கு மேல் நீட்டித்தால் சிரமம். நீங்கள் எதிர்பார்க்கும் பலன் கிடைக்காமல் போய்விடும்.
- உங்கள் படைப்பின் தலைப்பு சுண்டி இழுக்கும் தலைப்பாக அமைய வேண்டும். தலைப்பைப் படித்ததும் வாசகரைப் படிக்க வைக்க வேண்டும். என்ன சொல்ல வருகிறார்கள் என்ற ஆர்வத்தைத் தூண்டும்படி இருக்க வேண்டும். பிரபல சொற்றொடர்கள். மேற்கோள்கள் போன்றவற்றை அப்படியே பயன்படுத்தலாம்.
- உங்களுக்கு ஆயிரம் அனுபவம் கிடைத்திருக்குமே? உங்களை அதிர வைத்த அனுபவங்கள் எத்தனை? நீங்கள் விரும்பி ரசித்த அனுபவங்கள் எத்தனை? உங்களைச் சோதனைக்கு உள்ளாக்கிய அனுபவங்கள் இருக்கின்றனவா? உங்களை மெய் சிலிர்க்க வைத்தவை எத்தனை? எத்தனை?
- இவை அத்தனையுமே உங்களுக்கு ஒவ்வொரு தங்கச் சுரங்கம் போன்றவை. அதிர்ச்சி, மகிழ்ச்சி, புகழ்ச்சி, இகழ்ச்சி என்று

எத்தகைய அனுபவமாக இருந்தாலும் அவற்றைக் குறித்துக் கொள்ளுங்கள்.


- நீங்கள் இப்போது எப்படி உணர்ந்தீர்களோ அதே போன்ற உணர்வு வாசகர்களுக்கும் ஏற்படும். அவற்றைச் சொல்லுங்கள். நல்ல வரவேற்புக் கிடைக்கும். சொன்னால் நம்பமாட்டிர்கள் இருந்தாலும்...அது உண்மை என்று ஆரம்பியுங்கள்.
- நீங்கள் சொல்வது உண்மை அனுபவமாகவே இருக்கட்டுமே. அதில் கற்பனைச் சரக்கிற்கு இடம் வேண்டாம். அளவுக்கதிமாக அனுபவங்கள், கண்ணால் பார்த்தவை, காதால் கேட்டவை எல்லாவற்றையும் சொல்லுங்கள்..







- இத்தகைய பொருள் குறித்த எழுதுவதற்கு முன்பு அது யாருக்காக எழுதப்படுகிறது என்பதை முடிவு செய்து கொண்டு அதற்கு ஏற்பக் கொடுங்கள். பெண்கள், மாணவர்கள், இளைஞர்கள், ஆன்மீக வாதிகள் என்று வகைப்படுத்திக் கொள்ளலாம்.
- உங்கள் அனுபவங்கள் எப்படிச் சுவையாக இருக்குமோ அதே போல மற்றவர்களின் அனுபவங்களையும் நீங்கள் எழுதலாம். இதற்கு நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உங்கள் நண்பர்கள், உறவினர்கள், ஊழியர்கள் போன்றவர்கள் சொல்லும் விசயங்களைக் காது கொடுத்த கேட்பதுதான்.


- நீங்கள் எழுதும் போது சில சொற்களை சொற்றொடர்களை தவிர்க்கத்தான் வேண்டும். அமங்கலமான வார்த்தைகளை முடிந்த வரை பயன்படுத்தாதீர்கள். திரும்பத் திரும்பப் பயன்படுத்தப்படும் சொற்கள் சொற்றொடர்களைக் கையாளாதீர்கள்.
- **எழுதும்போது எழுத்தில் நம் மனம் ஒன்ற வேண்டும். நாம் முழுமையாக அதில் ஈடுபடவேண்டும். ஒரு கனவு போல கதை நம்மில் நிகழ வேண்டும்.**
- உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்” இலக்கியத்தை நுகர்ந்தவரின் நெஞ்சிலே அந்தச் சுவை அனுபவம் நிரமபிக் கிடக்குமானால்? எழுத்திலே அது நிரம்பி அமைவது எளிதாகும்.







- ஒரு சிறந்த எழுத்தாளர் ஆவது எப்படி? சிறந்த எழுத்தாளர் ஆக வேண்டுமாயின் ஓர் எழத்தாளர் முதலில் எழுத்து பிழையின்றி எழுத வேண்டும். மக்கள் எதிர்பார்ப்பு இலக்கிய தமிழ் அல்ல. பிழையில்லா தமிழ்.
- மேலும், எந்த ஒரு படைப்பு எழுதும் போதும் நம் எண்ண அலைகளை சிறைப்பிடித்து எழுத வேண்டுமே தவிர, இது எல்லோராலும் போற்றபட வேண்டும் என்றோ, சிறந்த படைப்பாக வேண்டும் என்றோ எழுத கூடாது.

- அப்படி செய்தால் உங்கள் எண்ண ஒட்டம் விளைவுகளை சிந்தித்த வண்ணம் தங்கள் எழுத்துக்கு தடங்களாகவே வரும்
- எழுத்துலகில் இமாலய வெற்றி பெற்ற பேராசிரியர் மு.வரதராசனாரும், 'செந்தாமரை' என்னும் முதல் நாவலைத் துணைவியாரின் நகையை அடகு வைத்துப் பணம் பெற்றுத் தான் வெளியிட்டிருக்கிறார்.
- எனவே நூல் வெளியீட்டு முயற்சியில் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்காகவும் போராட்டங்களுக்காகவும் மனம் தளர்ந்து விடாதீர்கள்.'முயற்சி திருவினை ஆக்கும்' என்னும் வள்ளுவரின் மணிமொழியைக் கருத்தில் கொண்டு ஊக்கத்தோடு செயல்படுங்கள், ஆக்கம் தானாக உங்கள் இல்ல முகவரியைக் கேட்டுத் தெரிந்து கொண்டு வந்து சேரும்! இப்போது எளிதாக இணையத்தில்கூட வெளியிடலாமே?
- எழுதுவதற்கான பயிற்சி என்பது என்ன? தொடர்ச்சியாக எழுதுவதே. ஆரம்பத்தில் நமக்கு அப்படி எழுத முடியாமைக்குக் காரணம் நாம் எழுத்துக்குப் பழகவில்லை என்பதே.







- நம் மனம் கற்பனை செய்யும் போது எழுத முடிவதில்லை. எழுதுவதில் உள்ள கவனம் நம் கற்பனையை தடுக்கிறது. ஆகவே இரண்டையும் சமன் செய்யும்பொருட்டு நாம் மாற்றி

மாற்றி எழுதிப் பார்க்கிறோம். கிழித்துப் போடுகிறோம். எரிச்சல் கொள்கிறோம்

- தொடர்ந்து எழுதிக் கொண்டே இருந்தால் எழுத்து கைக்கும் மனதுக்கும் பழகி விடும். அது தானாகவே நிகழும்.
- நீங்கள் கற்பனைமட்டும் செய்தால் போதும். சிலம்பாட்டம் கற்றுக் கொள்ளச் சென்றால் முதலில் சிலம்பைச் சுழற்றவே கற்றுக் கொடுப்பார்கள். சுழற்றிச் சுழற்றி சிலம்பு கையிலிருப்பதே தெரியாமல் ஆகும். அப்போது வித்தையில் மட்டுமே கவனம் இருந்தால் போதும். மனம் செல்லும் இடத்துக்கு கம்பு போகும். அதைப் போல எழுத்து வசமாகும் வேண்டுமென்றால் எழுதிக்கொண்டே இருக்க வேண்டும். ஆரம்ப கட்டத்தில் இது அவசியம்.
- எழுத்துக்கு முதல் தேவை மொழியறிவு இல்லை. நெஞ்சுத் துணிச்சல் தேவை. நேர்மை மனம் தேவை. மிகமிகப் படித்தவர்கள் எழுதப் நேர்ந்த கோழைகளாக இருப்பதைப் பார்க்கின்றோம். கொட்டி வைத்த நெற்குவியலாய் இருப்பதைப் பார்க்கிறோம்! முளைவிடும் நாற்றங்கால்களாய் மாற வேண்டும். கலப்பைக் கலக்கிய விளை நிலைமாக நாம் மாறினால்தான் விளைவிக்க முடியும்.
- உங்களுக்கு ஒரு விஷயம் மனமாரப் பிடித்திருந்து, அந்த விஷயத்தை நீங்கள் மனமொப்பி எழுதினால் போதும். அந்த எழுத்து, வாசகர்கள் மனத்தில் ரேஷன் கார்டில் கிழித்த கோடு போன்று ஆழமாய்ப் பதியும்.




- நூலகங்கள், பத்திரிகைகள் இரண்டும் இன்றையத் தமிழை வளர்க்கும் கருவூலங்கள். எவர் எவர் எழுத்திலே தெளிவு, உருவம் உளவோ அவற்றை மக்கள் பேணுவார்கள். ”நான் உனக்குப் புலவன்”,நான் உனக்கு ஆசான்” என்று எழுதும் மேதைகளை வாசகர்கள் ஒதுக்கிவிடுவார்கள். ”நான் உன் நண்பன்”, நான் உன் தோழன்” என்று எழுதும் நபர்களை வாசகர்கள் அணைத்துக் கொள்வார்கள்.
- எண்சான் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்பார்கள். இல்லையா? அதைப் போலத்தான் உங்கள் படைப்பிற்கும், தலைப்பைப் பார்த்தவுடனேயே உள்ளே நுழைந்து படிக்கவேண்டும் என்கிற ஆவலைத் தூண்ட வேண்டும்.
- தொடக்க நிலையில் எவரும் உங்களைக் கண்டு கொள்ள மாட்டார்கள்; எந்தப் பதிப்பகத்தாரும் உங்கள் எழுத்தை வரவேற்று ஆராதிக்க மாட்டார்கள். கவலைப்படாதீர்கள்,
- 'தோன்றின் புகழோடு தோன்றுக!' என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கு இணங்க, புனைகதை, கவிதை, நாடகம், கட்டுரை, தன்முன்னேற்றச் சிந்தனை என எந்தத் துறையில் நீங்கள் காலடி எடுத்து வைத்தால் சாதிக்க முடியும் என்று உங்களுக்குத் தோன்றுகிறதோ, அந்தத் துறையில்

முழுமையாக, நூற்றுக்கு நூறு முனைப்புடன் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்;

- இமைப்பொழுதும் சோராது பாடுபட்டு எழுதுங்கள். பிறகு 'நான், நீ' என்று முன்னணிப் பதிப்பகங்கள் போட்டி போட்டுக் கொண்டு தாமாகவே உங்களைத் தேடி வரும்; உங்கள் நூல்களை வெளியிடும்.








- 'எத்தனை நந்திகள் வழி மறித்துத் தடுத்தாலும்; நல்ல எழுத்து என்பது உரிய இடத்தை ஒரு நாள் அடைந்தே தீரும்' என்பார் எழுத்தாளர் புதுமைப்பித்தன்.
- நம்பிக்கையுடனும் தொலைநோக்குடனும் நன்கு திட்டமிட்டு எழுத்துலகில் சீராக நடை பயின்றால், உங்களுக்கு ஆன அங்கீகாரம் உடனடியாக இல்லை என்றாலும், உரிய நாளில் கிடைத்தே தீரும்!
- எழுத ஆரம்பிக்கும்போது எழுத்தில் கவனம் கொள்ளவேண்டிய மூன்று தொழில்நுட்ப விஷயங்களை கவனத்தில் கொள்ளுங்கள். **சொல்லாதீர்கள், காட்டுங்கள்." படைப்பின் கருத்தை படைப்புக்குள் சொல்லாதீர்கள். "படைப்பின் வடிவங்களை கற்றுக்கொள்ளுங்கள்"**
- **"சொல்லாதீர்கள், காட்டுங்கள்."** எழுத ஆரம்பிப்பவர்கள் படைப்புகளை சுருக்கமாகச் சொல்ல முயல்வார்கள். காரணம்

அது நாம் சாதாரணமாக வாழ்க்கையில் செய்வது. நடந்ததை சுருக்கமாகச் சொல்வது.





- தியான வாழ்க்கையை எவருக்கும் சொல்லாதீர்கள், நானே அங்குவந்து வாழும் அனுபவத்தை எனக்கு அளியுங்கள்.
- உங்கள் படைப்பை எழுத ஆரம்பிக்கும்போது அதைப்பற்றி ஒரு தெளிவற்ற சித்திரம் உங்களிடம் இருப்பதே நல்லது. எழுதி எழுதி அந்த தெளிவின்மை மறைய வேண்டும்
- ஆனால் இலக்கியத்தின் நோக்கம் அனுபவத்தைத் தெரிவிப்பது அல்ல. அது கற்பனை மூலம் வாசகனை அந்த அனுபவத்தை தானும் அடைய வைக்கவே முயலவேண்டும்.
- ஆகவே உங்கள் படைப்பு கண்முன் உண்மையில் நிகழ்ந்தால் எப்படி இருக்குமோ அந்த காட்சியனுபவத்தை வாசகனுக்கு அளியுங்கள். நுண்ணிய தகவல்கள் மூலம் படைப்பை கண்ணிலே காட்டுங்கள்.




- படைப்பு என்பது வாசகனுக்கு அனுபவத்தை அளிப்பது. கருத்தை அவனே உருவாக்கிக் கொள்ளட்டும். வாசகனுக்கு நீங்கள் ஒரு கருத்தைச் சொன்னால் அது உங்கள் கருத்து. அவனே அதை கதையில் கண்டடைந்தால் அது வாசகனின் கருத்து.
- உங்கள் படைப்புக்குள் என்ன சொல்லப்படுகிறது என்பது அல்ல முக்கியம். என்ன உணர்த்தப்படுகிறது என்பதுதான் முக்கியம்.
- படைப்பின் வடிவம் பற்றிய ஒரு பிரக்ஞை எழுத்தாளனுக்கு தேவை. இன்றுவரை படைப்பிலக்கியம் அடைந்துள்ள சிறந்த

வடிவத்தை முயன்று கற்று அதை நாமும் அடைவதற்கான முயற்சி தேவை.


- ஒரு படைப்பு என்றாலே தொடக்கவுரை, மையக்கருத்து மற்றும் முடிவுரை என்ற இந்த அமைப்பு இருக்கும். இவற்றை விவரித்து எப்படி எழுதுவது?
  தொடக்கவுரை அதாவது முன்னுரையை வாசகர்கள் படிக்கும் போதே நாம் சொல்லவரும் தகவல் அல்லது செய்தி தெளிவாக விளங்க வேண்டும்.
- ஒரு படைப்பை முயற்சி செய்து எழுதுகிறீர்கள். அத்துடன் உங்கள் வேலை முடிந்துவிட்டது என்று இருந்து விடாதீர்கள். பெரும்பாலானவர்கள் அப்படி இருந்து விடுகிறார்கள்.
  நீங்களும் அப்படி இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இந்த அழுத்தம்.




- மொழியின் இலக்கண இலக்கிய அறிவைவிட, எழுதும் ஆர்வம், சொல்ல வேண்டிய துடிப்பு, சொல்லாமால் தீராது என்னும்

முயற்சியுள்ளவர்களே எழுத்தாளர்கள் என்னும் பெயரைப் பெறுவார்கள்.

- எழுத்தாளனின் எண்ணங்களை வாசகனும் வாசகனின் எண்ணங்களை எழுத்தாளனும்  பகிர்ந்து கொள்ள வேண்டும்.
- எழுதுவது என்பது முழுநேர வேலை.  அதற்கு தொழில் நுணுக்கமும், ஒன்றிப் போகும் குணமும் அளவற்ற பொறுமையும் சகிப்புத் தன்மையும் வேண்டும்.
- □எழுத்தாளனாக எப்படி ஆவது?□ சரியான கேள்வி? இதற்கு எளிதில் பதில் சொல்லிவிடலாம்.  எழுதிப் பாருங்கள். முதல் முறை வெற்றி பெறாவிட்டால் மறுமுறை முயலுங்கள். அப்போழுதும். வெற்றி கிடைக்காவிட்டால் மற்றொரு முறை முயற்சி செய்யுங்கள்!  அதிலும் பிரயோசனமில்லையா? விடாதீர்கள் எழுதுங்கள், எழுதிக் கொண்டே இருங்கள். என்றைக்காவது ஒரு நாள், உங்கள் படைப்பு அச்சில் வராமலா போகும்.  முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்ற முதுமொழியைக் கேட்டதில்லையா?




- எழுதும் இரகசியத்தை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொடுக்க முடியாது. வித்துக்குள் விருட்சம் ஒளிந்து கிடக்கிற மாதிரி உங்களுக்குள் ஹாஸ்யம் எழுத்தாக வடிவம் எடுக்க வேண்டும். எழுத்தார்வம் உங்களுக்குள் ஒளிந்து கிடந்தால், நீங்களாகவே வெளிப்படுத்துவிர்கள். உங்களைப் பிறர் தூண்டு வெளியே கொண்டு வருவார்கள்.
- வாழ்க்கையை நாம் மொழியில் சொல்ல ஆரம்பித்ததுமே அதை ஒரு கண்ணாடியில் பார்ப்பதுபோல பார்க்க ஆரம்பித்து விடுகிறோம். அதன் குறைகள் தெளிவாக கண்முன் நிற்கின்றன.




- இதைப்போன்ற ஒரு சிகிச்சைமுறைதான் இலக்கியமும். கொள்கைக்காக திரிக்காமல், மிகைப்படுத்தாமல் உள்ளது உள்ளபடி சொல்ல ஆரம்பித்தாலே போதும். இலக்கியத்தின் முதல்படி அதுவே.
- காரணம் சின்னவிஷயங்கள் இலக்கியத்தில் பெரிய விஷயங்கள். அவற்றுக்கு இலக்கியத்தில் அசாதாரணமான ஆழம் கைவந்துவிடும்..
- கவிதை என்றால் தொடக்க வரியே போதும். என்னுடைய பெரும்பாலான படைப்புகளை நான் தொடங்கும்போது முதல் வரி அல்லது ஒரு மனிதனின் முகம் அல்லது ஒரு காட்சி மட்டும்தான் இருக்கும். மொத்தக் கதையும் நான் எழுதும்போதுதான் உருவாகி வரும்.
- ஆகவே ஒரு கரு லேசாக மனதில் உருவானதுமே அதை எழுதிப்பாருங்கள். மேலே ஓடவில்லை என்றால் விட்டுவிடுங்கள். பின்பு சமயம் வரும்போது வேறு வகையில் அதை எழுத முடியும். எழுதினால் மட்டுமே அதில் என்ன சிக்கல் இருக்கிறதென தெரியும்.

.


- எதை எழுதினாலும் தெளிவாக எழுத வேண்டும். பிறர் உள்ளம் புண்படாமல் எழுத வேண்டும்.

- பல சமயம் எழுதி நாலைந்து பத்தி போனதும்தான் அந்தக் கரு நல்ல கருவே அல்ல என்று தெரியும். மனதில் இருக்கும்போது அது தீவிரமானதாகவே நாம் எண்ணிக்கொண்டிருப்போம்.
- எழுதிப்பார்க்கும்போது பல விஷயங்கள் தெரியவரும். அந்தப் அப்படி தொடங்கியிருக்கக் கூடாது என்று தெரியவரும்.
- நாம் எழுதும் மொழிநடை உத்தி போன்றவை அப்படைப்புக்குப் பொருத்தமானதாக இல்லை என்று தெரியவரும். அதேபோல அந்தக் கணம் வரை நாம் உணராத பல சாத்தியங்கள் சட் சட்டென்று திறந்தும் கிடைக்கும்.




- உங்கள் படைப்புக்கு இன்றைய காலமே மேலானது. இன்றுள்ள அற உணர்வு அன்று இல்லை. இன்றுள்ள சமத்துவ வாய்ப்புகள் அன்று இல்லை. வாழ்க்கை இன்று மேம்பட்ட நிலையிலேயே உள்ளது. ஆகவே பின்னால் திரும்பிப் பார்த்து அந்த விழுமியங்களை நோக்கி ஏங்குவதில் பொருளில்லை. சென்ற காலத்தை நாம் வாழும் காலத்தில் நின்றபடி அணுகி அதிலிருந்து கொள்ள வேண்டியதை மட்டுமே கொள்ளும் நோக்கையே ஏற்றுக் கொள்ளுங்கள்.
- நீங்கள் எழுதப்போகும் கட்டுரைக்கோ அல்லது ஒரு படைப்புக்கோ ஒரு கச்சிதமான வடிவம் தேவை. பக்க அளவு முக்கியம்.
- சுவையாக எழுத வேண்டும். தெளிவாக எழுதுவதற்கு எழுதுபவன் தான் முதலில் தெளிவு பெறவேண்டும். பொருளைக் கடுமையான நடையில் அல்லாமல் எளிய நடையில் சொல்ல வேண்டும்.

- இனிமையாக எழுத வேண்டுமானல் உவமைகளையும், அழகான மேற்கோள்களையும் எடுத்துக் காட்ட வேண்டும். எல்லாச் சமயங்களும் சொல்கின்ற கதைகளையும், உவமைகளையும் தெரிந்து ஆளுதல் மிகப் பயன்தரும்.
- நல்ல படைப்புகளை  எழுதுவதன் சில நடைமுறை விதிகள் இருக்கின்றன.  கூடுமானவரை அவற்றைப் பின்பற்றினாலே உங்கள் படைப்பு வாசகனின் மனதில் இடம் பெறும்.
- உங்கள் படைப்பு எதைப்பற்றியது என ஒரே ஒருவரியில் சொல்ல உங்களால் முடிய வேண்டும். அதுவே அதன் மையம். அதாவது ‘கரு’




- உங்கள் படைப்பில் முதல் வரியிலேயே அந்த கரு நேரடியாக வெளிப்படுவது நல்லது. அல்லது அந்தக் கருவை நோக்கி நேரடியாகச் செல்லும் ஒரு வழி அந்த முதல்வரியில் திறந்திருக்க வேண்டும்
- உங்கள் படைப்பின் அந்த மையக்கருவை நிறுவக்கூடிய விவாதங்களாக தொடர்ந்து வரும் வரிகள் வெளிப்படவேண்டும். அதற்கான ஆதாரங்கள், அதை நிறுவும் நிகழ்ச்சிகள், அனுபவங்கள், அதை மறுக்கும் வாதங்களுக்கான பதில்கள் ஆகியவை.
- உங்கள் படைப்பு ஒரே உடல் கொண்டதாக இருக்க வேண்டும். இரண்டு தனி விஷயங்கள் இணைக்கப்பட்டதுபோல

தோன்றவே கூடாது. ஒருவிஷயத்துக்கு ஒரு கட்டுரை என்பதே நல்லது

- உங்கள் படைப்பில்  முன்னுரை ,அல்லது பீடிகை இருந்தது என்றால் அது அப்படைப்பில் அளவில் எட்டில் ஒருபகுதிக்கும் குறைவாகவே இருக்கவேண்டும். எவ்வளவு சுருக்கமான பீடிகை இருக்கிறதோ அந்த அளவுக்கு நல்லது. பீடிகை கண்டிப்பாக மையக்கருவை சுட்டவேண்டும்– நுட்பமாகவேனும்.


- உங்கள் படைப்பில் மையக்கருவிலிருந்து விலகி சில தகவல்களை அல்லது கருத்துக்களைச் சொல்வதாக இருந்தால் அவற்றை இடைவெட்டுகளாக ஒருவரியில் அல்லது இரண்டு வரியில் சொல்லிச் செல்வது நல்லது. அடைப்புக் குறிக்குள் சொல்வது, — போட்டுச் சொல்வது சிறப்பு.
- உங்கள் படைப்பிற்குத் தகவல்கள் எப்போதும் அவசியம். ஆனால் எத்தனை முக்கியமான தகவலாக இருந்தாலும் அது உங்கள் படைப்பை வரட்சியானதாக ஆக்கும்.




- ஆகவே தகவல்களை எப்படியெல்லாம் சுவாரசியமாக ஆக்க முடியுமோ அப்படியெல்லாம் சுவாரஸியமாக ஆக்கவேண்டும்.

தகவல்களை குட்டிநிகழ்ச்சிகளாக ஆக்கலாம். ஒன்றுடன் ஒன்று பிணைக்கலாம். சொல்லும் மொழியால் வித்தியாசப்படுத்திக் காட்டலாம். பட்டியல்கள் ஒரு கட்டுரைக்கு எப்போதுமே பெரும் பாரம்.


- மேற்கோள்களை முடிந்தவரை தவிர்ப்பதே படைப்புக்கு நல்லது. மேற்கோள் கொடுக்கும்போது வித்தியாசமாகவோ கவித்துவமாகவோ தீவிரமாகவோ வேடிக்கையாகவோ கூறப்பட்ட மேற்கோள்களை மட்டுமே … போட்டு அப்படியே கொடுக்க வேண்டும்.
- அதாவது அந்த மேற்கோள் வாசகனை நின்று கவனிக்க வைப்பதாக இருக்க வேண்டும். எக்காரணத்தாலும் நீண்ட மேற்கோள்கள் ஒருபடைப்பில் வரக்கூடாது. ஒருபோதும் எல்லாருக்கும் தெரிந்த மேற்கோள்களை கொடுக்கக் கூடாது.
- பொதுவான சாதாரணமான கருத்துக்களை ஒரு முக்கிய பிரமுகர் சொல்லியிருந்ததை எடுத்துக் காட்டுவதானால் அக்கருத்துக்களை சுருக்கி நம் சொற்களில் கொடுப்பதே நல்லது.




- உங்கள் படைப்புகளில் வழக்கமான வரிகளையும் வளர்த்தல் வரிகளையும் தேடிக் கண்டடைந்து வெட்டித்தள்ள வேண்டும்.
- எழுதும்போது சரியாகச் சொல்லிவிட்டோமா என்ற ஐயத்தில் நாம் மேலும் ஒருவரி சொல்ல உந்தப்படுவோம். அதை கட்டுப் படுத்த வேண்டும். இதை எப்படி சொல்வதென்று

தெரியவில்லை, ஆனால் சொல்லித்தான் ஆகவேண்டும்
போன்ற வரிகள் கூடவே கூடாது.

- எந்த மொழியில் படைப்பு எழுதப் போகிறீர்களோ அந்த மொழியில் ஓரளவு சொல் ஆட்சித் திறனும் இருந்தால்தான் உங்கள் படைப்புகள் வெற்றியடையும்.
- சொல்லாட்சித் திறனில்லாத எழுத்தாளன் எழுதிய படைப்பு, சமைக்கத் தெரியாதவன் தயாரிக்கும் சமையலைப் போன்றதுதான்.அதில் ருசிகரமான பதார்த்தத்துக் கரிய வெஞ்சனம் எல்லாம் இருக்கும். அது சமைக் ப்பட்டும் இருக்கும். ஆனோல் ருசிமட்டும் இருக்காது.
- படைப்பை எழுதுகிற நீங்கள் வாழ்நாளெல்லாம் மற்றவர்களுடைய படைப்புகளையும் படித்துக்கொண்டே இருக்க வேண்டும்.
- சிறுகதைகளோ, காவியம், சமயம், ஆன்மீகம், நாவல், நாடகம் போன்ற இலக்கியங்களையும், உலக அனுபவங்களையும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்.
- தான் காண்கிற, கேட்கற, படிக்கிற, அனுபவிக்கிற ஒவ்வொன்றனுடைய உண்மைகளையும் சாரத்தையும் கண்டறிவதற்கு முயலவேண்டும்.
- படைப்புகளைப் படிப்பதோடு, அதன் விமர்சனங்களையும் படிக்க வேண்டும்.



- பிறர் செய்யாத ஒரு காரியத்தை அல்லது ஒரு புதுமையை சாதிப்பதற்கு மட்டும்தான் படைப்பை எழுத வேண்டும்.
- எழுதும் பயிற்சியை நிரந்தரமாக வைத்துக் கொள்ள வேண்டும். நீண்ட காலம் எழுதாமல் நிறுத்தி வைப்பது தவறு. எழுத எழுதத்தான் எழுத்து சிறக்கும். “சித்தரமும் கைப்பழக்  கும்” என்பது போல், எழுத்துச் சித்திரமும் கைப் பழக்கத்தால்தான் சிறக்கும்.
- ஒரு படைப்பு ஒரே போக்காக போவது நல்லது. நடுவே உடைபட வேண்டுமென்றால் அதிகபட்சம் ஒரு உடைவு. அதற்குமேல் போனால் அப்படைப்பு சிதறியிருப்பதாகவே தோன்றும்.
- முன்னுரை சிறிய அளவாக இருக்க வேண்டும். படைப்பின் பத்தின் ஒரு பங்காக இருப்பது சிறப்பாக இருக்கும்.
- முதல் வரியிலேயே மையக்கருத்தை நேரடியாக வெளிப்படுத்துவது சிறப்பு. அதாவது கட்டுரை எதைப் பற்றியது என்பது ஆரம்பத்திலேயே சொல்லத் தெரிய வேண்டும்.
- படைப்பின் பொருளை விளக்கும் போது பத்தி பிரித்து எழுத வேண்டும்.
- ஒரு பத்தி (பந்தி) எழுதும் போது அதன் கருத்து முழுமையாக இருக்க வேண்டும். ஒரு பத்தி (பந்தி) முழுமையாக நிறைவடைந்த பின் அடுத்த பத்தியில் (பத்தியில்) வேறு கருத்துக்களை எழுத தொடங்க வேண்டும்.
- பத்தி (பந்தி) பிரிக்கும் போது கருத்தின் அடிப்படையிலே பத்தி பிரிய வேண்டும்.
- எழுத்தாளன் ஒருபோதும் தன் இன,மத,சாதி,மொழி அடையாளங்களை தன் அடையாளமாகக் கொள்ளலாகாது. அவை அவனது பேசு பொருட்கள் மட்டுமே. அவன் அதற்கு வெளியே இருப்பவனாகவே தன்னை உருவகித்துக் கொள்ள வேண்டும். நமது மரபு நமக்கு முக்கியம். நாம் அதைக் கற்று உணர்ந்து அதன் சிறந்த அம்சங்களை சுயப்படுத்திக் கொள்ள வேண்டும். அதுவே நமது பண்பாடு என்பது.




- தெளிவான மொழி நடையில் அனைவருக்கும் விளக்க கூடியதாக எழுத வேண்டும். எழுத்து பிழைகள் இல்லாமல் எழுதவேண்டும்.
- சரியான குறியீடுகள் குறிப்பாக நிறுத்தல் குறியீடுகள், மேற்கோள் குறிகள் பொருத்தமான இடங்களில் பயன்படுத்துதல் வேண்டும்.
- மையக்கருத்தை வெளிப்படுத்தும் இடத்தில் அதற்கான ஆதாரங்கள், சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் மற்றும் அனுபவங்கள் போன்றவற்றை இணைத்து எழுதுதல் நன்றாக இருக்கும்.
- எளிய சொற்களில் சிறு சிறு தொடர்களாக எழுதுவது நம் கருத்தை அல்லது எண்ணங்களை தெளிவாக விளக்கும்.
- சொல்லவரும் கருத்தை நேரடியாக உரை நடை வடிவத்தில் சொல்ல வேண்டும். கலவை தொடர்கள் சொல்லவரும் கருத்தை தவறான கோணத்தில் கொண்டு செல்லவும் சந்தர்ப்பம் இருக்கின்றது.
- முடிவுரை என்பது நாம் கூறிய மையக்கருத்தை தெளிவாக வலியுறுத்துவதாக இருக்க வேண்டும். அத்துடன் சொல்லப்பட்ட கருத்துக்களை தொகுத்து கூறுவதாக அமைய வேண்டும்.
- உங்கள் படைப்பு முடிவுரை மிக நீளமாக எழுதுதல் கூடாது. நான்கு அல்லது ஐந்து வரிகளுக்குள் எழுதுதலே சிறந்த முடிவுரையாக இருக்கும்.

- படைபின் தலைப்பை நோக்கி என்..? எப்படி..? எதற்கு..? யார்..? என சில கேள்விகளை கேளுங்கள் அதற்கு விடையாக வருவதை கொண்டு சிறந்த படைப்பினை எழுத முடியும்.
- படிப்பவர்களை உங்கள் படைப்பை ஈர்க்குமாறு இருக்க வேண்டும். வாசகர்கள் ஆர்வமாக வாசிக்கும் படி எழுத வேண்டும்.
- உங்கள் படைப்பு என்பது எடுத்தல், தொடுதல், முடித்தல் என்ற வகையில் இருக்க வேண்டும்
- எழுதி முடிந்த உங்கள் படைப்பை கச்சிதமாக ஆக்குங்கள். சில வார்த்தைகள் உங்களையும் அறியாமல் திரும்பத் திரும்ப இடம் பெற்றிருக்கலாம். இரக்கம் வைக்காமல் வெட்டுங்கள். தேவைக்கு அதிகமான வர்ணனைக்கு இடம் அவசியமில்லையே.
- 1. பளீரென்ற தொடக்கம்...2.. பாம்பு ஊர்வது போல சரசரவென்ற போக்கு...3. கவனத்தில் ஆழப்பதியும் ‘முத்தாய்ப்பு’ கொண்ட முடிவு—என சிறுகதைக்குரிய மூன்று அடிப்படை இயல்புகளும் கட்டுரைக்கும் தேவை. சிறந்த படைப்புக்கு அடிப்படைக் குணம் இதுவே– அது வளர்த்தலோ திசை திரும்பலோ இல்லாமல் இருக்கும். ‘கச்சிதமான கட்டுரை’ என்ற வரி ‘சிறந்த கட்டுரை’ என்பதற்கு சமமானதே.

## துணைநின்ற நூல்கள்


1. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க
2. புத்தகம் எழுதலாம் வாங்க
3. நானும் என் எழுத்தும்
4. நான் ஏன் எழுதுகிறேன?
5. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க.
6. இணையதள தகவல்கள்
7. பானுகுமார் படைப்புலகம்

# பானுகுமார் படைப்புலகம்

(171 புத்தகங்கள -31.12.2021 வரை)

PDF www.banukumar.in






## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
4. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
5. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்

5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்
19. ஷேக்ஸ்பியரும் வேதாத்திரியமும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை

12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்
20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் (**ஒப்பாய்வு**)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து

15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுமானவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?

6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்

3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்
3. தொலைந்து போன உறவுகள்
4. பத்மாவும் கதவும்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

# பானுகுமார் படைப்புலகம்


1. நானும் என் எழுத்தும்
2. நீங்களும் எழுதலாம் வாங்க
3. புத்தகம் எழுதலாம் வாங்க
4. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க
5. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க
6. நான் ஏன் எழுதுகிறேன்

# கம்பனும் வேதாத்திரியமும்

1. கம்பனும் வேதாத்திரியமும் 1 (இலக்கிய திறனும் கருத்தியலும்)
2. கம்பனும் வேதாத்திரியமும் 2 (நாடும் அரசும்)
3. கம்பனும் வேதாத்திரியமும் 3 (இறை சிந்தனைகள்)
4. கம்பனும் வேதாத்திரியமும் 4. (மானுடம் வென்றதம்மா)



1. Vethathiriam banukum (Youtube channel)
2. Thayumanavar banukumar (Youtube channel)
3. Kumar vadivelu (Youtube channel)




vethathiriam Banukumar

## (Youtube channel) Titles

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும் வேதாத்திரியமும்
8. ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்ப ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
31. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33. புத்தக வெளியீடு

34. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38. வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43 .ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45 ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47. காலமெல்லாம் வேதாத்திரியம்
48. வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49. என்னைச் செதுக்கிய நூல்
50. தினசரி தியானம் சனவரி
51. தினசரி தியானம் பிப்ரவரி
52. தினசரி தியானம் மார்ச்
53. தினசரி தியானம் ஏப்ரல்
54. தினசரி தியானம் மே
55. தினசரி தியானம் ஜூன்
56. தினசரி தியானம் ஜூலை
57. தினசரி தியானம் ஆகஸ்டு
58. தினசரி தியானம் செப்டம்பர்
59. தினசரி தியானம் அக்டோபர்
60. தினசரி தியானம் நவம்பர்
61. தினசரி தியானம் டிசம்பர்
62. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67. தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68. ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1

69. ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70. ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72. மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76. புலவர் தியாகராஜனார் பாகம் 1
77. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79. அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80. அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81. அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82. ஆன்மீகம் ஆன்மீகம்
83. டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84. டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85. டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86. தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87. சுயமுன்னேற்றம்
88. பத்திரகிரியார் சிந்தனைகள்
89. மன்னார்குடி
90. ஆராய்ச்சி - நன்மக்கட்பேறு
91. பொதுவானவை
92. மனைவிக்கு மரியாதை
93. திருமூலர் சிந்தனைகள்.
94. ஆண்டாள் சிந்தனைகள்
95. திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96. திருக்குறள் சிந்தனைகள்
97. அப்பர் சிந்தனைகள்
98. பட்டினத்தார் சிந்தனைகள்
99. பட்டினத்தார் ஒப்பாய்வு
100. சிவவாக்கியார் சிந்தனைகள்
101. ஔவையார் சிந்தனைகள்
102. சித்தர்கள் சிந்தனைகள்
103. திருமங்கையாழ்வார்

104. வள்ளலாரின் சிந்தனைகள்
105. பசி என்னும் பாவி
106. பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107. Retirement Speech
108. Audio speech part 1
109. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
113. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
114. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
116. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
118. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
119. மனவளக்கலையில் வாசி யோகமா?
120. வேதாத்திரியம் மானுட வேதம்
121. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
122. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைகின்ற பொருள்
123. வேதாத்திரியப் பார்வையில் கருணாகரக் கடவுள்
124. மனவளக்கலையின் மகத்துவம்
125. அருட்தந்தையே நீ ஒரு அற்புதம்
126. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவர் காட்டும் ஆறு பகைவர்கள்
127. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
128. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாள் கண்ணி பாகம் 1
129. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
130. முதுமையிலும் உற்சாக வாழ்க்கை பாகம் 1
131. முதுமையிலும் உற்சாக வாழ்க்கை பாகம் 2
132. முதுமையிலும் உற்சாக வாழ்க்கை பாகம் 3
133. புலவர் தியாகராஜனார் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள் பாகம் 2

134. புலவர் தியாகராஜனார் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள் பாகம் 3

135. தாயுமானவரின் தத்துவங்கள்

136. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள் (வேதாத்திரியம் ஒப்பாய்வு 2)

137. பேரக்குழந்தைகளை மகிழ்வது எப்படி?

138. வேதாத்திரியப் பார்வையில் மனிதனும் மதமும் பாகம் 1

139. திருமந்திரமும் வேதாத்திரியமும்

140. நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

141. நானும் என் எழுத்தும்

143. நீங்களும் எழுதலாம் வாங்க

144. புத்தகம் எழுதலாம் வாங்க

145. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க

146. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க

147. நான் ஏன் எழுதுகிறேன்.

148. வாழ்க்கையை வெற்றி கொள்வது எப்படி? (வேதாத்திரியப் பார்வையில் 100 டிப்ஸ்)

149. மானுடம் சிறந்த வாழ்க்கை வாழ வேதாத்திரியத்தின் பத்து கட்டளைகள்.

150. கம்பனும் வேதாத்திரியமும் (இலக்கியத் திறனும் கருத்தியலும்)

151.சிறுகதைகள்


வாழ்க வையகம்
குரு அருள்
வாழ்க வளமுடன்
மிகச் சிறந்த
ஆன்மீக
சொற்பொழிவுகளுக்கு
யூடியூப்
சேனல் பெயர்
YouTube
VETHATHIRIAM BANUKUMAR
Subscribe
கண்டு பேரின்பம் அடைவோம்
சப்ஸ்கிரைப் செய்வோம்
பிறருக்கும் பகிர்வோம்